# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,193 — 1960 සැප්තැම්බර් 2 වැනි සිකුරාදා — 2.9.1960

12,193 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 2 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் |
|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 215 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 218 |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | 219 |
| ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| அந்நிபகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| ஏல விற்பனைகள் .. .. .. | — |
| நாணுவிதம் .. .. .. | 219 |


## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### தபால் தந்திப் பகுதி

#### தபாற் கந்தோர்த் தலைவர் தந்தியாளர் நியமனப் பரீட்சை

1. பரீட்சைத் திகதி - 1961 ம் ஆண்டு தை மாதம் 20 ம், 21 ம் திகதிகள்.

2. தபாற் கந்தோர்த் தலைவர் தந்தியாளராக ஆண் பரீட்சார்த்திகளைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை கொழும்பிலும், கீழே குறிப்பிடப்படும் இடங்களிலும் நடத்தப்படும்.

கம்பகா, களுத்துறை, மொறட்டுவை, நீர்கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை, மட்டக்களப்பு, திருகோணமலை, அநுராதபுரம், கேகாலை, இரத்தினபுரி, கண்டி, மாத்தளை, யாழ்ப்பாணம், மன்னூர், பருத்தித்துறை, வவுனியா, வதுளை, சிலாபம், குருநாக்கல், புத்தளம்.

குறிப்பு.—போதியளவு பரீட்சார்த்திகளில்லாத பரீட்சைத் தானம் இரத்துச்செய்யப்படும்.

3. (அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடத்தப்படும்.

(ஆ) தகுதிப் பரீட்சையைச சிங்களத்தில் எடுத்துச் சித்தியடைந்த பரீட்சார்த்திகள் பரீட்சையை அந்த மொழியிலேயே எடுக்க வேண்டும். தகுதிப் பரீட்சையைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில்எடுத்துச் சித்தியடைந்தவர்கள் பரீட்சையை அந்த மொழியில் எடுக்கவேண்டும். ஆனல் அவர்கள் விரும்பினுற் சிங்கள மொழியில் எடுக்கலாம். கீழே . 4 (iii) (உ) ல் கூறப்பட்டுள்ள தராதரம் உள்ளவர்கள் தாங்கள் க.த.ப. பரீட்சையை எம்மொழியில் எடுத்துச் சித்தியடைந்தார்களோ அம்மொழியிற் பரீட்சையை எடுக்க வேண்டும். ஆனுற் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் எடுத்துக் க.த.ப. பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் தாங்கள் விரும்பினுற் பரீட்சையை சிங்களத்தில் எடுக்கலாம்.

(இ) கல்வித் தராதர நிபந்தனை இல்லாமலும் 4 (3) ல் குறிப்பிட்டுள்ள கல்வித்தராதரம் இல்லாமலும் இந்தப் பரீட்சையை எடுப்பதற்கு அனுமதிக்கப்பட்ட தபால் உதவியாளர் தங்களுக்கு எம்மொழியிற் கல்வி கற்பிக்கப்பட்டதோ அம்மொழியில் பரீட்சையை எடுக்க வேண்டும். ஆனுற் தமிழில் அல்லது ஆங்கிலத்திற் கற்பிக்கப்பட்டவர்கள் விரும்பினுற் பரீட்சையைச் சிங்களத்தில் எடுக்கலாம்.

4. தகுதி-பொது நிபந்தனைகள்-(1) பரீட்சார்த்திகள் நன்னடத்தையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

(2) பரீட்சார்த்திகள்-இலங்கையராக இருக்க வேண்டும். இந்த நியமனங்களுக்கு ஓர் இலங்கையர், பரம்பரையால் அல்லது பதிவு மூலம் ஓர் இலங்கைப் பிரசையாய் இருத்தல் வேண்டும்.

(3) பரீட்சார்த்திகள் குறைந்தபட்சம் கீழ்வரும் பரீட்சைகளிற் சித்தியடைந்தவர்களாய் இருத்தல் வேண்டும்.

(அ) சிரேட்ட தராதரப்பத்திரப் பரீட்சை (சிங்களம்) அல்லது ;

(ஆ) சிரேட்ட தராதரப்பத்திரப் பரீட்சை (தமிழ்) அல்லது ;

(இ) சிரேட்ட தராதரப்பத்திரப் பரீட்சை (ஆங்கிலம்) அல்லது ;

(ஈ) இலங்கை நுண்தொழிற் கல்லூரி கடைசி வர்த்தகப் பரீட்சை அல்லது ;

(உ) கீழ்வருவனவற்றில் ஒன்று—

(i) கேம்பிறிச் கனிட்ட தராதரப்பத்திரப் பரீட்சை ;

(ii) க.த.ப. பரீட்சை (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்) கல்விப் பகுதி ;

(iii) க.த.ப. பரீட்சை (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்) கல்விப் பகுதியால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை.

இதனுடன் கீழ் வருவனவற்றுள் ஒன்றும் ;

(i) இலண்டன் வர்த்தக சங்கத்தின் இலங்கைப் பாடத்திட்டத்தின் கீழ் உள்ள வர்த்தக கல்விப் பரீட்சை (பொதுவர்த்தக அல்லது சுருக்கெழுத்து தட்டச்சாளர் பிரிவு) (வெளிநாடு) அல்லது உயர்தரவர்த்தக கல்விப் பரீட்சை (பொது வர்த்தக அல்லது சுருக்கெழுத்து தட்டச்சாளர் பிரிவு) (வெளிநாடு) ;

(ii) இலங்கை வர்த்தக சங்கத்தாலும் இலங்கைக் கல்விப் பகுதியாலும் நடத்தப்பட்ட வர்த்தக கல்விப் பரீட்சை (பொது வர்த்தக அல்லது சுருக்கெழுத்து தட்டச்சாளர் பிரிவு) அல்லது உயர்தர வர்த்தக கல்விப் பரீட்சை (பொது வர்த்தக அல்லது சுருக்கெழுத்து தட்டச்சாளர் பிரிவு) ;

(iii) இலங்கை நுண் தொழிற் கல்லூரி வர்த்தக பரீட்சை அல்லது உயர்தர வர்த்தக பரீட்சை (கணக்குப் பதிபவர்களுக்கு அல்லது சுருக்கெழுத்து தட்டச்சாளர்களுக்கு).

(4) பரீட்சார்த்திகள்—

(அ) ஐந்து அடி உயரத்திற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும் ;

(ஆ) நல்ல கட்புலனும் செவிப்புலனும் உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும் ;

(இ) தெற்றிப் பேச்சில்லாதவராய் அல்லது தெலிபோன் தந்திச் சேவைகளைத் திறன்படச் செய்வதைத் தடுக்கக்கூடிய தன்மையில் பேச்சுவன்மையிற் குறைபாடில்லாதவர்களாய் இருத்தல் வேண்டும் ;

(ஈ) தெளிவாய்' எழுதக்கூடியவர்களாய் இருத்தல் வேண்டும். சிங்களத்தில் அல்லது தமிழில் ஒரு நிமிடம் 15 சொற்களும் ஆங்கிலத்தில் 22 சொற்களும் சொல்வதெழுதல் எழுதக் கூடியவர்களாய் இருத்தல்வேண்டும். பரீட்சார்த்திகள் இடது கையினராய் இருக்கக்கூடாது.

(உ) பரீட்சார்த்திகள் 1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 8 ந் திகதியில் 17 வயதுக்கு குறைந்தவர்களாக அல்லது 26 வயதுக்கு மேற்பட்டவர்களாய் இருக்கக்கூடாது.

5. தகுதி-இந்தப் பகுதியில் ஏற்கெனவே நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கான விசேட சலுகைகள்.

(அ) தபால் உதவியாளர்கள் :

(i) வயது, கல்வித்தராதர சேவைக்கால நிபந்தனைகளின்றி இந்தப் பரீட்சையை எடுப்பதற்கு தபால் உதவியாளர்கள் தகுதி உடையவராவர். இவர்கள், 14 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள (1) ம் (2) ம், (3) ம் பாடங்களுடன் 14 ம் பந்தி (1) ம் பகுதி (ii) ம் குறிப்பின் கீழ் கூறப்பட்டுள்ள பகுதிநடைமுறைப் பாடத்தையும் எடுக்க வேண்டும். இந்நான்கு பாடங்களிலும் மொத்தப் புள்ளிகளாக நாற்பது வீதம் அல்லது அதற்கு மேல் பெறுபவர்கள் தபாற் கந்தோர் தலைவர் தந்தியாளர் சேவைக்கு நியமிக்கப்படுவர்.

(ii) பரீட்சார்த்திகள் ஐந்து அடி உயரத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும், இடது கையினராய் இருக்கக்கூடாது, என 4 ம் பந்தி (4) (அ) (ஈ) இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ளவை தபால் உதவியாளர்களுக்குப் பொருந்தாது.

(ஆ) நிரந்தர ஊழியர்கள் :

(i) தபாற் தந்திப் பகுதியில் நான்கு வருட நிரந்தரமானதும் திருப்திகரமானதுமான சேவை (வேறு பகுதியில் நிரந்தரமாகவோ தற்காலிகமாகவோ, அல்லது இப்பகுதியில் தற்காலிகமாகவோ புரிந்தசேவை இந்நான்குவருடச் சேவைக்குக் கணிக்கப் படமாட்டாது) புரிந்த இப்பகுதி எல்லா ஊழியர்களும், வயது, கல்வித் தராதர நிபந்தனைகளின்றி இப்பரீட்சை எடுக்க அனுமதிக் கப்படுவர்.

(ii) க.த.ப. பரீட்சை குறைந்த கல்வித் தராதரமாக இப்பொழுது வேண்டப்படும் தரத்திற்கு முன்னர் சேர்க்கப்பட்டவர்களும் நான்குவருட நிரந்தரமானதும் திருப்திகரமானதுமான சேவை புரிந்த எல்லா ஊழியர்களும் பொதுப்போட்டியில் இடம் பெறுவதில் சித்தியடையாது ஆனல் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளாக குறைந்தளவு நாற்பது வீதம் பெற்றிருப்பின், தபாற் கந்தோர் தலைவர் தந்தியாளர் சேவையில் காலியான இடங்களில் 25 வீத இடங்களுக்கு தங்களுக்குட் போட்டியிட அனுமதிக்கப்படுவர். தகுதிபெறும் பரீட்சார்த்திகள் ஒதுக்கப் பட்ட இடங்களில் 25 வீதத்திற்கு குறைவாக இருப்பின் மீதமான காலியிடங்கள் பொதுப் போட்டியில் சித்திபெற்று மொத்தப் புள்ளிகளில் 50 வீதம் பெறுபவர்களால் நிரப்பப் படும்.

(iii) தபாற் தந்திப் பகுதியில் இரண்டுவருட நிரந்தரமானதும் திருப்திகரமானதுமான சேவை செய்தவர்கள் க.த.ப. பரீட்சை (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) யில் சித்தியடைந்திருந் தால் இப்பரீட்சையை எடுக்க அனுமதிக்கப்படுவர்.

(iv) 4 (3) ம் பந்தியிற் குறிப்பிட்டுள்ள கல்வித் தராதரத்தைப் பெற்றவர்களான இப்பகுதியைச் சேர்ந்த எல்லா நிரந்தர ஊழியர்களும் சேவைக்கால நிபந்தனையின்றி இப்பரீட்சையை எடுக்க அனுமதிக்கப்படுவர்.

(இ) தற்காலிக ஊழியர்கள் :

(i) தபாற் தந்திப் பகுதியில் 4 வருடங்கள் தொடர்ச்சியாகவும் திருப்திகரமாகவும் சேவை செய்த எல்லா ஊழியர்களும் க.த.ப. பரீட்சை (சிங்களம், தமிழ், ஆங்கிலம்)யில் சித்தியடைந் திருந்தால் இப்பரீட்சையை எடுக்க அனுமதிக்கப்படுவர்.

(ii) தபாற் தந்திப் பகுதியில் ஒரு வருடம் தொடர்ச்சியாகவும் திருப்திகரமாகவும் சேவை செய்த எல்லா ஊழியர்களும் 4 (3) ம் பந்தியில் கூறப்பட்டுள்ள கல்வித்தராதரத்தைக் கொண்டவர்களாகவும் 1960 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8 ந் திகதி 45 வயதிற்குட்பட்டவர்களாகவுமிருந்தால் இப்பரீட்சையை எடுக்க அனுமதிக்கப்படுவர்.

(ஈ) உப-தபாற் கந்தோர்த் தலைவர்கள் :

(i) இப்பகுதியில் நான்கு வருடங்கள் தொடர்ச்சியாகவும் திருப்திகரமானதாகவும் சேவை செய்த உப-தபாற் கந்தோர்த் தலைவர்கள், வயது, கல்வித்தராதர நிபந்தனைகளின்றி இப்பரீட்சை எடுக்க அனுமதிக்கப்படுவர்.

(ii) தபாற் தந்திப் பகுதியில் ஒரு வருடம் தொடர்ச்சியாகவும் திருப்திகரமாகவும் சேவைசெய்த உப-தபாற் கந்தோர்த் தலைவர்கள் 4 (3) ம் பந்தியில் கூறப்பட்டுள்ள கல்வித்தராதரத்தைக் கொண்டவர்களாய் இருந்தால் இப்பரீட்சை எடுக்க அனுமதிக்கப் படுவர்.

குறிப்பு.—சிங்களம் அல்லது தமிழ் மொழியில் இந்தப் பரீட்சையை எடுக்கும் பரீட்சார்த்திகள் 14 ம் பந்தி—1 ம் பகுதியில் (7) வது பாடமாகத் தரப்பட்ட விசேட ஆங்கில வினாப்பத்திரத்தை எடுக்க வேண்டும்.

6. (i) தபாற் தந்தி தலைமை அதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்ட தரம் அல்லது சேவையைச் சேர்ந்த தபாற் தந்திப் பகுதி ஊழியர்களுக்கு மட்டுமே 5 வது பந்தியில் கூறப்பட்ட சலுகைகள் பொருந்தும்.

(ii) இப்பகுதியின் இணைந்த சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் உப-தபாற் கந்தோர்த் தலைவர்களின் உதவியாளர்களும் பிரதியாளர்களும் கீழ்ப்பணித்தரத்தினரின் பிரதியாளர்களும் 5 வது பகுதியில் கூறப்பட்டுள்ள சலுகைகளுக்கு உரிமையுடையவர்களாகார்.

7. வேதனமும் சேவை நிபந்தனைகளும் :

(i) (அ) பயிற்சிக்காலத்தில் மாதம் ஒன்றுக்கு 60 ரூபாவும் வாழ்க்கைச்செலவுப் படியும் ;

(ஆ) தபாற் கந்தோர்த் தலைவர் தந்தியாளர் II ம் வகுப்பில் நியமனஞ் செய்யப்பட்ட பின் முதல் வருடம் 960 ரூபாவும் இரண்டாம் வருடம் 1,080 ரூபாவும், அதன் பின்னர் 1,260 ரூபா—120 ரூபா—3,780 ரூபாவும். 1,740 ரூபாவிலும் 2,940 ரூபாவிலும் திறமைக்கடப்புப் பரீட்சைகள் உண்டு.

(ii) சித்தியடைந்த பரீட்சார்த்திகள் தபாற் தந்திப் பயிற்சிப் பாடசாலையிலும் ஒரு தபாற் கந்தோரிலும் விடுதலை நாட்களைத் தவிர 6 மாதகாலத்துக்குப் பயிற்சி பெறும்படி வேண்டப்படுவர். தபாற் தந்தித் தலைமை அதிபதியின் விருப்பப்படி பயிற்சிக்காலம் நீடிக்கப்படலாம் அல்லது குறைக்கப்படலாம். தேவையான சந்தர்ப்பங்களில் இந்தப் பகுதி ஆரம்பத்திற்குறுகிய பயிற்சியை ஒழுங்குபடுத்தலாம். இப்படிச் செய்யப்படுமாயின் முழுப் பயிற்சியும் நியமனத்தின் பின்னர், இந்தப் பகுதியின் வசதிக்கியையப் பின்னர் ஒழுங்கு செய்யப்படும். பயிற்சிக் காலத்திற் பரீட்சார்த்திகள் தந்தியடிப்போராகவும், தந்தித் தட்டச் செழுத்தாளராகவும், தெலிபோன் இயக்குநராகவும் பயிற்றப்படுவதுடன் காசுடன் சம்பந்தப்பட்ட கருமபீட வேலைகளுக்கும் பயிற்றப்படுவர். பயிற்சியில் தெலிபோன் தந்திகள் தந்திகள் ஆகியவற்றைச் சிங்களத்தில், தமிழில், ஆங்கிலத்தில் ஏற்றல் ஒப்படைத்தல் ஆகிய முறைகளும் சிங்கள, தமிழ்த் தந்திகளை எழுத்துப்பெயர்த்தல் முறைகளும் அடங்கும். அவர்கள் எவ்வித கட்டணமோ அல்லது வைப்புப் பணமோ கொடுக்கும்படி வேண்டப்படமாட்டார். அவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிப்படி விடுதலை காலங்களுக்கு அல்லது வேறெக்காரணத்தினாலும் வராமல் நிற்கும் காலங்களுக்கு அவற்றுக்கான கழிவு செய்து கொடுக்கப்படும். ஆனல், பயிற்சிப்படி கொடுப்பது திருப்திகரமான நடத்தையையும் தேர்ச்சியையும் பொறுத்ததாகும். பரீட்சார்த்திகள் தபாற் தந்தித் தலைமை அதிபதி திருப்திப்படக்கூடியதாய்த் தங்கள் படிப்புகளிலும் நன்னடத்தைகளிலும் தேர்ச்சிகாட்டாவிடின் பயிற்சிக்காலத்தில் எந்நேரமாவது விலக்கப்படுவதுடன் அவர்களுடைய படியும் பறிமுதலாக்கப்படும். அப்படியாக விலக்கப் பட்ட எந்தப் பரீட்சார்த்தியும் பின்னர் தபாற் தந்திப் பகுதியிற் சேவைபெறுவதற்குத் தகுதியற்றவராவர்.

(iii) பயிற்சி முடிந்தபின் பயிற்றப்பட்ட பாடங்களில் பரீட்சார்த்திகள் பரீட்சிக்கப்படுவர். பரீட்சையிற் சித்தியடைந்தோர் தபாற் கந்தோர்த் தலைவர் தந்தியாளர் சேவையிற் காலியான இடங்கள் வரும்போது அவ்விடங்களுக்கு 3 வருடம் பரீட்சார்த்தமாக நியமிக்கப்படுவர். கீழே குறிப்பிட்ட நிபந்தனை (4) ல் அமையாத இந்தப் பரீட்சையில் விலக்கப்பட்ட பரீட்சார்த்திகள் தபாற் தந்திப் பகுதியிற் சேவை பெறுவதற்குத் தகுதியற்றவராவர்.

(iv) விதிவிலக்கான நிலைமைகளிற் தெலிபோன் தந்திப் போக்குவரத்து அத்தியட்சரின் சிபார்சுடன் தபாற் தந்தித் தலைமை அதிபதி ஒரு பரீட்சார்த்தியை நியாயமானதெனக் கருதப்படும் மேலதிக காலத்துக்கு அப்பரீட்சார்த்தியின் செலவிற் பாடசாலையில் இருப்பதற்கு அநுமதிப்பர். அத்தகைய பரீட்சார்த்தி அந்தக்காலம் முடிந்ததும் விசேடமாகப் பரீட்சிக்கப் படுவர்.

(v) ஒரு பரீட்சார்த்தி தபாற் தந்திப் பயிற்சிப் பாடசாலையில் முழுப் பயிற்சியையும் முடிக்குமுன் தனது வேண்டுகோளின்படி வேலையிலிருந்து நீங்குவராயின் அவர் தபாற் தந்திப்பயிற்சிப்பாடசாலையில் இருக்கும்போது பெற்ற படிகள் முழுவதையும் திருப்பிக் கொடுக்கும்படி வேண்டப்படுவர்.

(vi) பூரணமான ஆறுமாதப் பயிற்சி முடிக்காது தபாற் கந்தோர்த் தலைவர் தந்தியாளர் தரத்துக்கு நியமிக்கப்படும் பரீட்சார்த்திகளைத் தபாற் தந்திப் பயிற்சிப் பாடசாலைக்குப் பயிற்சியளிக்கப் பின்னர் அழைக்கும்போது பயிற்சி முடிவுற்ற நாளிலிருந்து மூன்று வருடங்கள் முடியுமுன்னர் தபாற்கந்தோர்த் தலைவர் தந்தியாளர் சேவையிலிருந்து விலகுவார்களாயின் பயிற்சிக்காலத்தில் அவர்கள் பெற்ற எல்லாப் பணத்தையும் திருப்பிக்கொடுப்பதாக உடன்படிக்கையைப் பரீட்சார்த்திகள் செய்தல் வேண்டும்.

**(vii)** தபாற் தந்திப் பகுதியிற் தபாற் கந்தோர்த் தலைவரும் தந்தியாளருமாகத்தெரியப்படும் பரீட்சார்த்திகள் தாங்கள் செய்து கொள்ளும் ஒப்பந்தத்திற்கூறப்பட்ட படியன்றி வேறு எந்த அரசாங்கப் பகுதிப் பரீட்சைக்காயினும் சமுகமளிக்கவோ அல்லது விண்ணப்பிக்கவோ அல்லது வேறு எந்த அரசாங்கப் பகுதியிலாவது நியமனம் பெறவோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**(viii)** தபாற் கந்தோர்த் தலைவர்களும் தந்தியாளர்களும் ஞாயிற்றுக் கிழமைகளும் விடுமுறைநாட்களும் உட்பட எல்லா நாட்களிலும் வேலை செய்ய வேண்டிநேரிடும். அவர்கள் தபாற் கந்தோர் விடுமுறைகளைத் தவிர்ந்த விடுமுறை நாட்களில் வேலை செய்வதற்கு எவ்வித மேலதிக சம்பளத்துக்கும் உரித்துடையராகார். பகலில் அல்லது இரவில் எந்த நேரத்திலாவது ஆரம்பிக்கும் அல்லது முடியும் வேலை நேரங்களிலும் அவர்கள் வேலை பார்க்கவேண்டும். அவர்கள் இடமாற்றத்துக்கும் இலங்கையின் எந்த நிலையத்திலாவது நியமிக்கப் படுவதற்கும் ஆளாவர்.

**(ix)** தபாற் கந்தோர்த் தலைவர்களும் தந்தியாளர்களும் 2,000 ரூபா பிணைப்பணம் கட்டவேண்டும். இந்தப் பிணைப்பணம் வருடாந்த வேதனம் 1,000 ரூபாவுக்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் மாதாந்தம் 7 ரூபா 50 சதவிகிதப்படியும் வருடாந்த வேதனம் 1,000 ரூபாவுக்கு மேற்படும் சந்தர்ப்பத்தில் மாதாந்தம் 10 ரூபா விகிதப்படியும் கழிக்கப்படும்.

**(x)** நியமனம், வியவகாரக் கைநூல், அரசாங்க சேவை அதிகாரசபை விதிகள் நிதிப்பிரமாணங்கள், இந்தப் பகுதிக்கட்டளைகள், அரசாங்கத்தால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் வேறு விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுக்கு உட்பட்டதாகும்,

**(xi)** இலங்கையில் எப்பகுதியிலும் சேவைபுரியத் தகுதியான தேகாரோக்கியம் உடையவர்களாவென அறிவதற்காகச் சித்தியடையும் பரீட்சார்த்திகள் அரசாங்க வைத்திய உத்தியோகத்தராற் செய்யப்படும் வைத்தியப்பரீட்சையிற் சித்தியடையவேண்டும். இப்பரீட்சையிற் தகுதியற்றவரெனக்காணப்படும் பரீட்சார்த்தியின் தற்காலிக நியமனம் தள்ளுபடி செய்யப்படும்.

**(xii)** சித்தியடையும் பரீட்சார்த்திகள், அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நிறைவேற்றுவதற்காக, பிரதானமாக 1956 ம் ஆண்டின் அரசியல் மொழிச்சட்டம் இல. 33 ல் கூறப்பட்டுள்ளவற்றை நிறைவேற்றுவதற்காக இதுவரை தயாரிக்கப்பட்ட எந்த விதிக்கும் அல்லது இனிமேல் தயாரிக்கப்படக்கூடிய விதிகளுக்கும் இணங்கி நடத்தல் வேண்டும்.

**(xiii)** ஆங்கிலம் அல்லது தமிழ்மொழியில் இந்தப்பரீட்சையை எடுத்து நியமனத்துக்குத் தெரியப்படும் பரீட்சார்த்திகள் தங்கள் தகுதிகாண் காலத்தில் சிங்களம் கற்க வேண்டும். இந்தப் பரீட்சார்த்திகளின் தகுதிகாண் காலம் முடிந்தபின் அவர்களுடைய நியமனம் உறுதிப்படுத்தப்படுவதானால் வேறு தகுதிகளுடன் சிங்களத்தில் அவர்கள் ஒரு பரீட்சையில் சித்தியடையவும் வேண்டும்.

**(xiv)** பரீட்சார்த்திகள் தங்களுடைய தகுதிகாண் காலத்தில் குறித்த அளவு தேர்ச்சியைச் சிங்களத்தில் எய்தாவிடினும் அவர்கள் அரசியல் மொழியைக் கற்பதற்கு உண்மையான ஊக்கம் எடுத்தார்களெனத் தபாற் தந்தி அதிகாரி திருப்திப்படுவாராயின் அவர்கள் வேலையிலிருந்து நிறுத்தப்படமாட்டார்கள். தகுதிகாண் நிலையிலுள்ளவர் பின்னர் ஒரு நியாயமான காலத்துள் அப்பரீட்சையில் சித்தியடைவாராயின் அவர் சிரேட்ட வரிசையில் இழந்த நிலையை, தபாற் தந்தி அதிகாரி தனது உசிதாசாரப்படி திருப்பிக்கொடுக்கக்கூடும்.

8. விண்ணப்பங்கள் : **(i)** இந்தப் பரீட்சைக்காகிய விண்ணப்பங்கள், இந்தக்கந்தோரில் 1960 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 30 ந் திகதிவரை பெற்றுக் கொள்ளக்கூடிய பத்திரங்களில் தபாற் தந்தித் தலைமையதிபதி என்ற விலாசத்துக்கு அனுப்பப்படவேண்டும். பரீட்சார்த்திகள் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது பரீட்சையை சிங்களத்திலோ தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ எடுக்க விரும்புகிறார்கள் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

**(ii)** பூர்த்தி செய்யப்பட்ட பத்திரங்களைப் பதிவுத் தபால் மூலம் தபாற்தந்தித் தலைமையதிபதி, பிரதம தபாற் கந்தோர், கொழும்பு 1 என்ற விலாசத்தில் 1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 8 ந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பவேண்டும். அந்த திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் யாவும் தள்ளுபடி செய்யப்படும். பரீட்சையின் பெயர் தபால் உறையின் இடது மேல் மூலையில் விளக்கமாக எழுதப்படல் வேண்டும்.

**(iii)** விண்ணப்பம் முறைப்படி அழிக்கப்பெற்ற 15 ரூபா பெறுமதியான முத்திரையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**(iv)** அரசாங்க சேவையில் ஏற்கனவே சேவைபுரிந்து வரும் பரீட்சார்த்திகள் தங்கள் விண்ணப்பங்களைத் தாங்கள் சேவைபுரியும் தலைவர் பகுதிகளுக்கூடாக அனுப்பவேண்டும். இவ்வாறு செய்யத் தவறும் பரீட்சார்த்திகள் தகுதியற்றவர்களென கணிக்கப்படுவர்.

9. பரீட்சைப் பிரவேசம் : **(i)** தபாற் தந்தி தலைமை அதிபதி விண்ணப்பங்கள் ஏற்கப்பட்ட பரீட்சார்த்திகள் எல்லோருக்கும் பிரவேசப் பத்திரங்கள் வழங்குவார். பரீட்சைக்குச் சமுகமளிக்கும் பரீட்சார்த்திகள் தங்கள் பிரவேசப்பத்திரங்களைப் பரீட்சையை மேற்பார்வை செய்வதற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம் கொடுக்கவேண்டும். அப்படியான பத்திரத்தைக் கொடாத பரீட்சார்த்தி பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

**(ii)** பரீட்சார்த்திகள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குச் சமுகமளிக்கவேண்டும். ஒரு பரீட்சார்த்தி தனக்கு நியமிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தைத் தவிர்ந்த வேறொரு பரீட்சை மண்டபத்தில் சமுகமளிப்பாராயின் அவர் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

**(iii)** நேரசூசி, பரீட்சார்த்திகளுக்காகிய விதிகள், அவர்களை, வழிகாட்டுவதற்காகிய குறிப்புகள் ஆகியவற்றின் ஒவ்வொரு பிரதி பிரவேசப்பத்திரத்துடன் அனுப்பப்படும். பரீட்சார்த்திகள் இந்த விதிகளால் கட்டுப்படுத்தப்படுவர். இந்த விதிகளை மீறினால் தபாற் தந்தித் தலைமை அதிபதியின் தீர்மானமே முடிவானதாகும். பரீட்சைக்குச் சமுகமளிக்கும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தமது பிரவேசப் பத்திரத்தைப் பரீட்சையில் அன்று மேற்பார்வையாளரிடம் கொடுக்கவேண்டும்.

**(iv)** ஒரு பரீட்சார்த்தியின் பிரவேசப்பத்திரம் குறைந்தது பரீட்சைத் திகதிக்கு ஏழு நாட்களுக்குமுன் அவருக்குக் கிடையாவிடின் காலம் தாழ்த்தாமல் கீழ்வரும் தகவல்களைக் கொடுத்துப் பிரவேசப்பத்திரம் தனக்குக் கிடைக்கவில்லை யெனத் தபாற் தந்தி அதிகாரிக்கு எழுத வேண்டும்.

(அ) பரீட்சையின் பெயர் ;

(ஆ) பரீட்சார்த்தியின் முழுப் பெயர் ;

(இ) பூரண தபால் விலாசம் ;

(ஈ) தபாற் கந்தோர்ப் பதிவிலக்கமும் விண்ணப்பம் பதிவுசெய்தனுப்பிய திகதியும் ;

(உ) தேர்ந்தெடுத்த பரீட்சைத் தானம்.

**(v)** பரீட்சைக்கு அனுமதிக்கப்படுதல் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வேண்டிய தகுதியை அங்கீகரித்ததாகாது.

**குறிப்பு.**—தபாற் தந்தித் தலைமை அதிபதி தனது உசிதாசாரப்படி ஒரு பரீட்சார்த்திக்குப் பரீட்சை எடுப்பதற்குத் தற்காலிக அனுமதி வழங்கலாம். இத்தகைய அனுமதி பின்னர் உறுதிப்படுத்தப்படலாம் அல்லது தள்ளுபடி செய்யப்படலாம்.

10. அறிமுக அட்டைகள் (1) பரீட்சார்த்திகள் தாம் எடுக்கும் ஒவ்வொருபாடம் சம்பந்தமாகவும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படக்கூடியதாகப் பரீட்சை மண்டபத்தில் தாம் இன்னாரென்பதை நிரூபித்தல் வேண்டும். இதன் பொருட்டுக் கீழ்க்காணும் சாசனங்களுள் ஏதாவது ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும்.

(அ) தபாற் தந்தித் தலைமை அதிபதியால் வழங்கப்பட்ட அறிமுக அட்டை ;

(ஆ) இப்பரீட்சைத் திகதிக்கு முன் மூன்று வருடங்களுக்குள் வழங்கப்பட்ட செல்லுபடியான பாஸ்போட் ;

(இ) இப்பரீட்சைக்கு முன் மூன்று வருடங்களுள் ஒரு அரசாங்கப் பகுதியின் அதிகாரத்துடன் வழங்கப்பெற்றதும் வைத்திருப்பவரின் புகைப்படத்தைக் கொண்டதுமான ஒரு அத்தாட்சிப் பத்திரம் லைசென்ஸ் பத்திரம் அல்லது வேறு சாதனம்.

2. தமது பிரவேசப்பத்திரத்துடன் மேலே குறிப்பிட்ட சாசனங்களுள் ஒன்றினை வைத்திராத பரீட்சார்த்தி எவரும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

11. தகுதிச் சான்றுப் பத்திரங்கள்.—**(i)** விண்ணப்பத்துடன் எவ்வித பத்திரங்களையும் இணைத்தல் கூடாது. ஆனால், விண்ணப்பப்பத்திரத்தில் கேட்டுள்ள தேவையான விபரங்கள் யாவும், அதில் குறிக்கப்பட வேண்டும். தேவையான விபரங்கள் யாவையும் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் அவற்றின் தகுதிக்கேற்றவாறு ஆராய்ந்து நிராகரிக்கப்படலாம்.

**(ii)** தகுதிபெற்ற பரீட்சார்த்திகள் தமது தகுதியை நிரூபிப்பதற்காகிய பத்திரங்களைக் காட்டக்கூடியதாயிருக்க வேண்டும். அத்தகைய பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையின்போது அவற்றை நேரிற் காட்டவேண்டும் அல்லது தபாற் தந்தித் தலைமை அதிபதி கோரினால் பதிவுத் தபால் மூலம் உடனே அவற்றை அனுப்பிவைத்தல் வேண்டும்.

**(iii)** கீழ்வரும் சான்றுப்பத்திரங்கள் தேவையாகும்—

(அ) பொறுப்பு வாய்ந்த ஒருவராற் கையொப்பமிடப்பட்ட ஒரு நற்சாட்சிப்பத்திரம் ;

(ஆ) பிறப்புப் பதிவுப் பத்திரத்தின் அத்தாட்சிப்படுத்தப்பெற்ற பிரதி ;

குறிப்பு.—(1) பாடசாலைகளிற் சேர்த்தற்காகப் பெறப்பட்ட விசேட பிறப்புச் சாட்சிப்பத்திரம் அல்லது பிறப்புப் பதிவுப் பத்திரத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சுருக்க விபரப்பிரதி அங்கீகரிக்கப்படமாட்டாது.

(2) பிறப்புச் சாட்சிப் பத்திரங்களுக்குப் பதிலாகச் சத்தியக் கடதாசிகள் அல்லது ஞானஸ்நானப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளபடமாட்டாது.

(3) பரீட்சார்த்தி, சாதாரணமாக வழங்குவதும் அவர் பரீட்சைக் குத் தோற்றும்போது குறிப்பிடுவதுமான பெயர்/பெயர்கள் அவரது பிறப்புப் பத்திரத்தில் காணப்படும் பெயரில்/பெயர்களில் இருந்து வேறுபடுவதாய்/வேறுபடுவனவாய் இருந்தால் 1951 ம் ஆண்டின் 17 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவுச்சட்டத்தின் 27 ம் அல்லது 28 ம் பிரிவில் எது பொருந்துமோ அதன்படி பிறப்புப் பதிவிலுள்ள பெயரைத் திருத்துதற்கு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். 1953 ம் ஆண்டின் 15 ம் இலக்க பிறப்பு, இறப்புப் பதிவு (திருத்த) சட்டத்தின் 24 (6) ம் பிரிவின்கீழ் பிறப்பின் பின் ஒருவருடத்திற்கு மேற்பட்ட காலத்தில் பதியப்பட்ட பிறப்புப் பதிவின் அத்தாட்சிப்படுத்தப்பெற்ற பிரதி, பிறந்த தேதியை நிலைநிறுத்தும் ஆதாரங்களைப் பரிசோதித்த பின்பு மாத்திரமே உத்தியோக நியமனத்தின் பொருட்டு அங்கீகரிக்கப்படும்.

(இ) இலங்கைப் பிரசையாகப் பதிவு பெற்றதற்குரிய சான்றுப்பத்திரம் அல்லது வம்சாவளிப் பிரசா உரிமை கோரினால் அக்கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டதைக் காட்டும் உத்தியோக பூர்வமான மூலக் கடிதம் (பொருத்துமிடத்து) ;

(ஈ) கல்வித் தராதரத்தைக் காட்டும் மூலச் சான்றுப் பத்திரம்.

(iv) விண்ணப்பஞ் செய்யும்போது பரீட்சார்த்திகள் எல்லாச் சான்றுப் பத்திரங்களையும் தயாராக வைத்திருக்க வேண்டும் என்று எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். நேர்முகப் பரீட்சையின்போது தேவையான சான்றுப்பத்திரங்களைக் காட்டமுடியாதிருக்கும் அல்லது தபாற் தந்தித் தலைமை அதிபதி கோரும்போது சான்றுப்பத்திரங்களைக் காட்டத் தாமதிக்கும் பரீட்சார்த்தியின் பதிவு நிராகரிக்கப்படும்.

12. பொய்யான விபரங்களைச் சமர்ப்பிப்பதற்குரிய தண்டனை—

இப்பரீட்சைக்கான பிரமாணங்களின்படி ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவரென காணப்பட்டால், பரீட்சைக்கு முன்போ, பரீட்சைக் காலத்திலோ, பரீட்சைக்குப்பின்போ, எந்த நேரத்திலாவது அவரது பரீட்சை உரிமை தள்ளுபடி செய்யப்படக்கூடும்.

பரீட்சார்த்தியால் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்களில் ஏதாவது அவர் அறிந்தவரையில் பொய்யெனக் கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது எந்த முக்கியமான உண்மையையும் அவர் வேண்டுமென்று மறைத்திருந்தால் அல்லது அவர் சேவை செய்யும் காலத்தில் எப்பொழுதாவது இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையரல்லர் என்று நிரூபிக்கப்பட்டால் அவர் உடனே சேவையிலிருந்து நீக்கப்படுவர்.

13. கட்டுப்பணம் திருப்பிக் கொடுத்தல் : (1) எந்தச் சந்தர்ப்பத்தை முன்னிட்டும் கட்டணப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

(2) இந்தப் பரீட்சைக்குச் செலுத்திய கட்டணப்பணத்தை வேறெப்பரீட்சைக்கும் உபயோகிக்க முடியாது.

14. பரீட்சைத் திட்டம்.—இப்பரீட்சைக்குரிய பாடங்களும் அவற்றுக்குரிய புள்ளிகளும் கீழே தரப்படுகின்றன. எழுத்தில் நடக்கும் பரீட்சைகளில் கூடாத எழுத்து எழுத்துப்பிழைகள் முதலியவற்றுக்குப் புள்ளிகள் கழிக்கப்படும். விளக்கமற்ற கையெழுத்து எழுதுவோர் பரீட்சைக்குத் தகுதியற்றவராகக் கணிக்கப்படுவர்.

1 ம் பகுதி

| | புள்ளிகள் |
|---|---|
| (1) சிங்கள/தமிழ்/ஆங்கில பாஷையும் வியாசமும் (1½ மணி நேரம்) .. .. .. | 150 |
| (2) பொது அறிவும், இலங்கை பற்றிய அறிவும் (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் (1 மணிநேரம்) .. | 100 |
| (3) எண் கணிதம் கூட்டல் உட்பட (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் (1 மணி நேரம்) .. .. | 100 |
| (4) தெ விவேகம் (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்) (45 நிமிட நேரம்) .. .. | 100 |
| (5) சிங்கள/தமிழ்/ஆங்கில சொல்வதெழுதல் .. | 100 |
| (6) பூமிசாத்திரம் (இலங்கையும் உலகமும்) (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்) (1 மணி நேரம்) | 100 |
| (7) ஆங்கிலத்தில் விசேட வினாப்பத்திரம் (1 மணி நேரம்) .. | 100 |

குறிப்பு.—(i) சிங்கள அல்லது தமிழ்ப் பாஷையில் இந்தப் பரீட்சையை எடுக்கும் பரீட்சார்த்திகள் இந்த வினாப்பத்திரத்தைக் கட்டாயம் எடுக்க வேண்டும். இந்த வினாப்பதிரத்தின் தரம் பொதுக் கல்வித் தராதரப் பரீட்சையின் தரத்தினதாகும். இது தகுதிப்பரீட்சையாய் மாத்திரம் கணிக்கப்படும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் ஆகக்குறைந்தது, இதற்குரிய முழுப் புள்ளிகளின் 40 வீதம் பெறவேண்டும். இப்படியாகத் தகுதியடைந்த பரீட்சார்த்திகளை நியமனத்துக்குத் தெரியும்போது இந்தப் பாடத்தில் பெறும் புள்ளிகள் கவனிக்கப்படமாட்டா.

(ii) தபாற் கந்தோர்த் கருமவிளக்கம், தபாற் கந்தோர் விதிகள் ஆகியவற்றில் காட்டியவாறு கருமபீட வேலைகளுடன் தொடர்புபட்ட பகுதி நடைமுறையில் ஒரு வினாப்பத்திரமும் தயாரிக்கப்படும். கீழே கூறப்பட்ட உத்தியோகத்தர்கள் மாத்திரம் இந்தப் பத்திரத்தை எடுக்கலாம்.

(அ) எல்லா தபால் உதவியாளர்களும் ;

(ஆ) ஒதுக்கப்பட்ட 25 வீதக் காலியான இடங்களுக்குப் போட்டியிடும் தபாற் தந்திப் பகுதியைச் சேர்ந்த எல்லா ஊழியர்களும், பொதுப் போட்டியிலோ அல்லது மட்டுப்படுத்தப்பட்ட போட்டியிலோ பூமிசாத்திர (இலங்கையும் உலகமும்)ப் பாடத்திற்குப் பதிலாக இப்பாடத்தை எடுக்க அனுமதிக்கப்படுவர்.

2 ம் பகுதி

நேர்முகப்பரீட்சை—(பரீட்சார்த்தி பரீட்சைக்கு எந்த மொழியிற் தோற்றுகின்றாரோ அந்த மொழியிலேயே நேர்முகப் பரீட்சை நடைபெறும்) புள்ளிகள் .. 100

15. பரீட்சை இரு பகுதிகளாக நடாத்தப்படும். 1 ம் பகுதி முதலில் நடைபெறும் இதன் முடிவுகளைக் கொண்டு நேர்முகப் பரீட்சைக்குப் போட்டி முறையில் தகுதி பெற்ற பரீட்சார்த்திகள் தெரியப்படுவர். இப்பரீட்சை கொழும்பில் நடைபெறும். இதற்குரிய திகதி பின்னர் அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கவேண்டிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையைத் தபாற் தந்தித் தலைமை அதிபதி நிர்ணயிப்பார். நேர்முகப் பரீட்சை நடவாது விடவும் கூடும்.

16. பரீட்சைப் பெறுபேறுகளைப் பிரசுரித்தலும் உத்தியோகத்தர்களை நியமித்தலும்.

சித்தியெய்திய பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கை அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்டு, இடங்கள் காலியாக வரும்போது அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும்.

17. தபாற் கந்தோர்த் தலைவர் தந்தியாளர் சேவை நிரந்தரமானதும், இளைப்பாற்றிச் சம்பள உரிமையுடையதுமாகும். விதவை அனுதர் இளைப்பாற்றி வேதனத்திட்டத்துக்கு சந்தா கட்டப்படுகிறது.

18. இந்த வர்த்தமானியின் I ம் பாகம் II ம் பிரிவின் தொடக்கத்தில் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைக் கவனிக்கவும்.

எச். ஈ. செனிவிரத்தின,
தபாற் தந்தித் தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர், கொழும்பு 1,
1960 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 26 ந் உ.

---

# கேள்விப் பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன இலாகா

ரூபா 10,000 க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் நீர்ப்பாசன இலாகாவில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து, மன்னார் நீர்ப்பாசனக் கந்தோரில் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கு வடபகுதி நீர்ப்பாசன அதிகாரியின் காரியாலயத்தில் (வவுனியா) 27.9.60 காலை 9.30 மணி வரையும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஏனைய விபரங்கள் யாவும் உப பிரிவு நீர்ப்பாசன இஞ்சினியரின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டீ. ஈ. சோமசுந்தரம்,
நீர்ப்பாசன எஞ்சினியர், மன்னார் மாவட்டம்.

முருங்கன்
1960 ம் ஆண்டு ஓகஸ்ற் மீ 23 ந் உ.

---

## நீர்ப்பாசன இலாகா

கந்தளாயிலிருக்கும் நீர்ப்பாசனத் திட்டத்தில் 1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1961 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதி முடிய அரசாங்க வேலைப் பொருட்கள் கொண்டு போவதற்கு திருகோணமலையிலுள்ள பெரும்பகுதி நீர்ப்பாசன இஞ்சினியர் அவர்கள் 20.9.60, செவ்வாய்க்கிழமை, பகல் 10 மணிவரை ரூபா 20,000/– அல்லது அதற்கு மேற்பட்ட தொகைகட்கு இந்த இலாகாவில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் ஏற்பார்.

கேள்விப்பத்திரங்கள் 17.9.60 வரை கந்தளாய் நீர்ப்பாசன இஞ்சினியர் அவர்களிடம் ரூபா 25/– ஒரு கச்சேரியிலோ அல்லது மேற்கூறிய இஞ்சினியர் அலுவலகத்திலோ பிணைப்பணமாகக் கட்டிப் பற்றுச்சீட்டுச் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். அரசாங்கத்தில் தற்சமயம் வேலை செய்பவர்கள் அவ்வேலைகளின் பெறுமதிகளையும் திருப்திகரமாக வேலைகள் நடைபெறுகின்றனவா என்பதற்கு அத்தாட்சிப் பத்திரங்களும் சமர்ப்பிக்கவேண்டும்.

நீர்ப்பாசன இஞ்சினியர்,
கந்தளாய் திட்டம்.

கந்தளாய்,
1960 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 27 ந் உ.

**கொழும்பு உணவுக் கட்டுப்பாட்டுப் பண்டகசாலைகளிலிருந்து 40 மைல் விட்டார்த்தத்துக்குள்ளான விநியோக நிலையங்கள் முதலிய வற்றிற்கு உணவுப் பொருட்களை லொறிகள் மூலம் கொண்டு செல்வதற்கான கோரிக்கைகள்—1960/61**

19.8.60 ந் திகதியன்று வெளியான இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் காணப்பட்ட மேற்காணும் சேவை பற்றிய விளம்பரம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு உள்ளது.

கே. எம். டி. ஜயனெத்தி,
உணவு அதிகாரி.

உணவு அதிகாரியின் காரியாலயம்,
330, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
1960 ம் ஞூ ஒகஸ்ற் மீ 24 ந வ.

---

**உணவுப் பகுதி**

சுமார் 63,350 பாவனைக்குகந்ததல்லாத சணற்சாக்குகள் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள் 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16 ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை உணவு அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இக்காரியாலயத்தில் பெறக்கூடிய விண்ணப்பப் பத்திரத்தில் விண்ணப்பம் செய்யப்படவேண்டும். இக்கோரிக்கை சம்பந்தமான விபரங்களடங்கிய பத்திரத்தை உணவு அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கே. எம். டி. ஜயனெத்தி,
உணவு அதிகாரி.

330, யூனியன் பிளேஸ், கொழும்பு,
1960 ம் ஞூ ஒகஸ்ற் மீ 25 ந வ.

---

**கடல்கடந்த தந்திப் போக்குவரத்துச் சேவை, கடிருனே கம்பியிலி நிலையம்**

**பாவனையற்ற இருப்புப் பொருட்களை வாங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள்**

இணைக்கப்பட்டுள்ள நிரலில் காட்டிய பாவனையற்ற இருப்புப் பொருட்களை வாங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் 1960 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ம் திகதி, மு.ப. 9.30 மணிவரை, கொழும்பு, கோட்டை மில்லர்ஸ் கட்டிட 1 ம் தளத்திலுள்ள கடல்கடந்த தந்திப் போக்கு வரத்துச் சேவை, முகாமையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

நீர்கொழும்புக்கு அருகாமையிலுள்ள கடிருனே கம்பியிலி நிலையத்தில் கிடக்கும், பாவனையற்ற இந்த இருப்புப் பொருட்களைப் பற்றிய ஏனைய விபரங்களை, கோட்டை யோர்க் வீதி, மில்லர்ஸ் கட்டிட 1 ம் தளத்திலுள்ள கடல்கடந்த தந்திப் போக்குவரத்துச் சேவை முகாமையாளரிடம் அல்லது நீர்கொழும்புக்கு அருகாமையிலுள்ள கடிருனே கம்பியிலி நிலையத்தின் பொறுப்பு இஞ்சினியரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திர விண்ணப்பங்கள், கடல்கடந்த தந்திப் போக்கு வரத்துச் சேவை முகாமையாளரிடம் அல்லது கடிருனே கம்பியிலி நிலையத்தின் பொறுப்பு இஞ்சினியரிடமிருந்து பெற்ற பத்திரங்களில் (இரட்டைப் பிரதிகளில்) அனுப்பப்படல் வேண்டும். கொழும்பு, மத்திய தந்திக் கந்தோர், தந்திக்காசாளரிடம் அல்லது வெளியிடமாயின் அப் பகுதித் தபாற் கந்தோர்த் தலைவரிடம் கேள்விப் பொறுப்புப் பணமாக ரூபா 25 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பவர்களுக்கே கேள்விப் பத்திர விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ந் திகதி பி.ப. 4 மணிவரை வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் " இருப்புப் பொருட்களை வாங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் (கடிருனே) " எனக் குறிப்பிடப்பட்டும், கடல் கடந்த தந்திப் போக்குவரத்துச் சேவை முகாமையாளருக்கு விலாச மிடப்பட்டதுமான உறைகளில் உள்ளடக்கப்பட்டு அவருக்கு 1960 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ந் திகதி, மு.ப. 9.30 மணிக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர், அவரது கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் கேள்விப்பத்திர பெறுமதியின் முழுத் தொகையை கொழும்பு மத்திய தந்திக் கந்தோர் பிரதான தந்திக் காசாளரிடம் கட்ட வேண்டும் அல்லது தபாற் தந்தித் தலைமை அதிபதியின் பெயருக்குச் சாட்டப்பட்ட குறுக்குக் கோடிட்ட காசோலையை கடல்கடந்த தந்திப் போக்குவரத்துச் சேவை முகாமையாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

1960 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ந் திகதி மு.ப. 10 மணிக்கு, கடல்கடந்த தந்திப் போக்குவரத்துச் சேவை முகாமையாளர் காரியாலயத் தில் கேள்விப்பத்திரம் திறக்கப்படும்போது கேள்விப்பத்திர கையொப்ப தாரர்கள் சமுகமளிக்க வேண்டும்.

எச். ஈ. செனவிரத்தின,
தபாற் கந்தோர்த் தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர்,
கொழும்பு 1.

**நீர்கொழும்புக்கு அருகாமையிலுள்ள கடிருனே கம்பியிலி நிலையத்தில் கிடக்கும் பாவனையற்ற இருப்புப் பொருட்களைக் கொண்டநிரல்**

தட்டெழுத்தியந்திரம், கடுங்குளிர்ப் பெட்டிகள், மின்சார மோட்டர், ஜெனனி, மாற்று ஆமேச்சர்கள், ஸ்ராட்டர்ஸ், றியோஸ்ரேற்ஸ், மாற்றிகள், காற்றுதிகள், இறைச்சிவைக்கும் பெட்டிகள், போர்ட் நிலையச் சுமை வண்டிகள், எண்ணெய் அடுப்புகள், வாயு கனலடுப்புகள் முதலியவை.

---

நம்பர் ஏ/எல். 381/60.

**கொழும்பு கப்பற்றுறை அதிகாரசபை**

முகத்துவாரம் இளவரசன் விஜயா துறைமேடையிலுள்ள தேனீர்ச் சாலையைக் குத்தகைக்குக் கொடுக்க முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21 ந் திகதி, புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். குத்தகை, கப்பற் றுறை ஆணையாளரால் குறிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற் காகும்.

2. கொழும்பு கப்பற்றுறை ஆணையாளர் கரைரியில் ரூபா 25 கட்டுப் பணமாகக் கட்டி அவ்விடமிருந்து பெறப்படும் பத்திரங்கள் நிரப்பப்பட்டு இணைப்பத்திரத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள், 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16 ந் திகதி நண்பகல் 12 மணிவரை கரைரி வேலை நேரங்களில் வழங்கப்படும்.

4. குத்தகைக்கான நிபந்தனைகள் கேள்விப் பத்திரங்களுடன் சேர்த் துக்கொடுக்கப்படும்.

ஏ. எஸ். கோபன்-விக்கிரம,
கப்பற்றுறை ஆணையாளர்.

கொழும்பு கப்பற்றுறை அதிகாரசபை,
கொழும்பு, 1960 ம் ஞூ ஆகஸ்டு மீ 25 ந வ.

---

# பொருட்கள் விற்பனையும், பிறவும்

**இலங்கை அரசாங்க கடற்படை**

1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16 ந் திகதி காலை 9.30 மணிக்கு கொழும்புக் கொச்சிக்கடையிலிருக்கும் கடற்படை ஸ்தாபனத்தில் பாவிக்க முடியாத பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும்.

2. அரசாங்க வேலை நேரத்தில் பொருட்களைப் பார்வையிடலாம்.

3. ஏலம் முடிந்த பொருட்களுக்கு உடனே முழுப்பணமும் கட்ட வேண்டும்.

துறைமுகத்துக்குள் போவதற்கு வேண்டிய அனுமதிச்சீட்டைக் கொழும் புத் துறைமுக அனுமதிச்சீட்டு வழங்கும் கந்தோரில் பெற்றுக்கொள்ள லாம்.

---

**விளம்பரம்**

செப்டெம்பர் மாதம் 15 ம் திகதி காலை 10 மணிக்கு இக்கச்சேரியில் இருப்பில் வைத்திருக்கப்பட்ட பாவித்த துவக்குகள் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். துவக்கு வாங்குவதற்குரிய பேர்மிட்டுகள் உள்ளவர்களும், துவக்குகள் விற்பனை செய்வதற்குரிய பேர்மிட்டுகள் உள்ளவர்களும் மட்டுமே துவக்குகளை வாங்க அனுமதிக்கப்படுவர். ஏற்றுக்கொள்ளப்பட்ட கூறுதலின் தொகை உடனேயே கட்டப்படுதல் வேண்டும்.

ஜே. வீ. பொன்சேகா,
அரசாங்க அதிபர்,
குருநாக்கல் மாவட்டம்.

கச்சேரி, குருநாக்கல்,
ஆவணி 27, 1960.

---

# நானாவிதம்

**1958 ன் 2 ஆம் இலக்கத் தேயிலை, இறப்பர் தோட்டங்கள் (துண்டாடுதலைக் கட்டுப்படுத்தல்) கட்டளைச் சட்டம்**

மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 3 (5) ஆம், 4 (4) ஆம் பிரிவுகள் சகல நொத்தாரிசுகளினதும் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன.

தேயிலை இரப்பர் தோட்டங்கள் (துண்டாடுதலைக் கட்டுப்படுத்தல்) சபையின் சம்மதச் சான்றிதழ்கள் வழங்கப்பட்ட காணிகளின் உறுதிகளை அத்தாட்சிப்படுத்தும் நொத்தாரிசுகள் மேற்கூறிய பிரிவுகளின் தேவைகளை அநேகமாகப் பூர்த்தி செய்யாதிருக்கக் காணப்பட்டிருக்கின்றது.

இனிமேல், தவறிழைக்கும் நொத்தாரிசுமார்களுக்கெதிராகச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்படி நடவடிக்கை எடுத்தலேயன்றிச் செய்யக் கூடியது பிறிதொன்றில்லையென்பதை இத்தால் அறிந்துகொள்க.

டபிள்யூ. எல். பி. டி மெல்,
செயலாளர்,
துண்டாடுதலைக் கட்டுப்படுத்தும் சபை.

கொழும்பு,
1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26 ந் திகதி.

**1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்**

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்) "

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், **சனிக்கிழமைகளில்** மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல்வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **" நகலை " கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக " ரைப் " அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு **ஏற்றுக்** கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரரால் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. **1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி** தொடக்கம் அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | .. | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | .. | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | .. | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | .. | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி.ப. 3 30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி.ப. 3.30 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. **ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முற்பணமாக கொழும்பு அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவுசெய்யப்படும்.**

14. **சந்தா விகிதங்கள்—**

| | ரூ. ச. | | |
|---|---|---|---|
| ஒரு வருட சந்தா .. | 15 0 | .. | ஒவ்வொரு பகுதிக்கும் |
| | 7 0 | .. | ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி .. | 0 25 | | |
| | 0 31 | .. | தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 10 | | |
| | 0 14 | .. | தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் **வேண்டும். கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு** விண்ணப்பிக்கவேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது